# கோட்டை வெங்கட்ராமசாமி ஆலயம்

சாந்திப்பிரியா





இன்றுள்ள பெங்களூர் மானிலம் எழுந்த வரலாறே சுவையானது. வீரபல்லா என்ற சோழ மன்னன் கி.பி 1120 ஆம் ஆண்டு காட்டில் வேட்டையாசச் சென்ற பொழுது வழி தவறி விட அன்று இரவு ஒரு மூதாட்டி அவருக்கு தங்குவதற்கு இடமும் உணவுடன் வேக வைத்த பீன்ஸ் கறியும் தந்து உபசரிக்க, அவள் நினைவாக அந்த மன்னன் இன்றைய பெங்களூர் உள்ள இடத்தை உருவாக்கி அதற்குப் பெயர் பெண்டகளூரு ( வேக வைத்த பீன்ஸ் ) என பெயரிட்டான். அந்த இடத்தைத்தான் 1537 ஆம் ஆண்டில் கெம்ப கௌடா என்ற மன்னன் சீரமைத்து மூன்று மாவட்டங்களைக் கொண்ட நகராக அமைத்து அரண் அமைத்தான். காலப்போக்கில் அந்த நகரம் பல மன்னர்கள் கை மாறி மைசூர் அரசர்களுடைய வசம் ஆயிற்று. அப்படிப்பட்ட நிலையில் திப்பு சுல்தான் பெங்களூர் வந்து வாசம் செய்தார். அந்த

முகலாய மன்னனின் ஆட்சியில் பெருமைப்பட்ட ஒரு ஆலயம்தான் வெங்கடரமணசாமி ஆலயம். அற்புதமான திராவிடக் கலையழகில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்ட அந்த ஆலயத்தை சிக்கதேவராய உடையார் என்ற மைசூர் குறுநில மன்னன் நிறுவினார். வெங்கடரமணசாமி ஆலயத்தின் பின்புறம் திப்பு சுல்தான் வந்து தங்கிய அரண்மனையும், குதிரை லாயமும் உள்ளன.

1790-92 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மூன்றாம் மைசூர் யுத்தத்தின் பொழுது அன்றைய கவர்னர் ஜெனரலாக இருந்த கார்னிவல் கொடுத்த உத்தரவின்படி பிரிடிஷ் படையினர் பரேட் கிரவுண்ட் என்ற இடத்தில் ( பெங்களூரில் உள்ளது ) இருந்து பெங்களூரில் வெங்கடரமணசாமி ஆலயத்திற்குப் பக்கத்தில் உள்ள திப்பு அரண் மீது எய்த பீரங்கிக் குண்டு அந்த ஆலயத்தின் கருடக் கம்பத்தில் விழ திப்பு சுல்தான் அதில் இருந்துத் தப்பினர். அந்த குண்டினால் ஆலயப் பகுதி சேதமுற்றது. ஆலயத்தின் சில பகுதிகள் சேதம் அடைந்துள்ள நிலையை இன்றும் பார்க்கலாம். அந்த ஆலயத்தினால்தான் தன் உயிர் காப்பாற்றப்பட்டது என மனதில் எண்ணி மகிழ்ச்சி அடைந்த திப்பு சுல்தானும், ஹைதர் அலியும் அந்த ஆலயத்தை பெரிதும் மதித்து ஆதரவு தந்து வந்தார்கள். அதால் அந்த ஆலயம் இந்து முஸ்லிம் மத சகிப்புத் தன்மைக்கு எடுத்துக் காட்டாக விளங்கியது. சிக்க கிருஷ்ணதேவராயர் என்ற மன்னனுடைய மகனான காந்தீர்வ வாடியார் 1811 ஆம் ஆண்டு வெங்கடரமணசாமி ஆலயத்திற்கு நன்றி விழா நடத்தி ஆலயத்தின் செலவிற்காக நான்கு கிராமங்களை தானமும் தந்து இருக்கின்றார். அந்த ஆலயத்திற்கு அருகில் திப்பு சுல்தான் அரண்மனையை தொட்டபடி பதினாறாம் நூற்றாண்டை சேர்ந்த ஒரு வினாயகர் ஆலயமும் உள்ளது.



திராவிடக் கலையில் கட்டப்பட்டு உள்ள அந்த ஆலயத்தில் உள்ள கருவறையில் கிரிஜா கல்யாண வைபவத்தைக் காட்டும் சிற்பங்களும்,

விஷ்ணு மற்றும் மகேஷ்வரர், சப்த ரிஷிகள், சப்த நர்த்தகிகள், அஷ்ட திக்பாலகர்கள் போன்றவர்களுடைய சிற்பங்களும் காணப்படுகின்றன. நான்கு துாண்களில் அற்புதமாக நவக்கிர நாயகர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டு உள்ளன. கருபக்கிரகத்தில் கோடி பிரசன்ன வெங்கடராமஸ்வாமி விக்ரகம் உள்ளது. அதன் தென் மேற்கு மூலையில் ஆஞ்சனேய ஸ்வாமி சன்னதியும் வட மேற்கு மூலையில் மகாலஷ்மி தாயர், ஸ்ரீ தேவி மற்றும் பூதேவி போன்றோரும் உள்ளனர்.

ஆலயத்தின் உள்ளே நுழைந்ததும் தென்படுவது அற்புதமான வெங்கட்ரமணஸ்வாமி - திருப்பதி ஏழுமலையான் - சன்னதி. கர்பக்கிரகம் இரண்டு அடுக்காக உள்ளது. அந்த சன்னதிக்கு தென் கிழக்குப் பகுதியில் கண்களை விட்டு அகல மறுக்கும் விதத்திலான பாறையில் செதுக்கப்பட்டுள்ள ஆஞ்சனேயர் சன்னதி உள்ளது. சுமார் நான்கு அடி உயரம், மூன்று அடி அகலத்தில் ஒரு பாறையில் ஆஞ்சனேயர் காட்சி அளிக்கின்றார். அவர் உண்மையிலேயே நிற்பது போன்ற தோற்றத்தை அந்த சிற்பம் தருகின்றது. அந்த ஆஞ்சனேயர் சன்னதிக்கு எதிரில் உள்ள 30-40 அடி நீள மண்டபத்தில் நவக்கிரக நாயகர்களின் சிலைகள் சுமார் 3 அடி உயரத்தில் வெண்ணிர பாறைக் கல்லில் வடிவமைக்கப்பட்டு துாணில் வரிசையாக வைக்கப்பட்டு உள்ளன. வெங்கட்ரமணஸ்வாமி சன்னதியின் வடமேற்குப் பகுதியில் உள்ளது மகாலஷ்மி சன்னதி. அந்த சன்னதியின் எதிரில் உள்ள மண்டபத்து துாண்களிலும் பல கடவுள் சிலைகள் வடிவமைக்கப்பட்டு உள்ளன. மேற் கூறையில் கிருஷ்ண பகவானின் லீலைகள், சப்த ரிஷிகள், சப்த கன்னிகைகள், பிரும்மா, விஷ்ணு, மகேஷ்வர் போன்ற சிலைகள் வெண்ணிர கல்லில் வடிவமைக்கப்பட்டு உள்ளது இன்னும் அற்புதம். ஆலயத்தின் நுழை வாயிலில் வானளாவிய கொடி மரம். ஆலயத்தில் நுழைந்தால் நாம் எதோ பழைய கால ஆலயத்தில் நுழைவது போன்ற உணர்வு ஏற்பட்டாலும் கண்களை விட்டு அகல மறுப்பது அனுமார் சன்னதிதான் என்பது மறுக்க முடியாத உண்மை.

15.10.1811ல் **H.H.** மும்முடி கிருஷ்ணதேவராயர என்பவர் பெங்களூர் வந்த பொழுது இந்த ஆலயத்தில் பூஜைகள் செய்த பின்னரே ஆலயத்தின் பின்பறத்தில் உள்ள திப்பு சுல்தானினின் கோடைக் கால வாஸஸ்தலத்தில் வந்து ராஜதர்பார் வைபவத்தில் கலந்து கொண்டார்.

பஞ்சரத்ன அகம விதிப்படி தினமும் ஆராதனைகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு வருடமும் மே மற்றும் ஜுன் மாதத்தில் ஆலயத்தில் தேர்

திருவிழா நடைபெறுகின்றது. உகாதியன்று விஷேச பூஜைகள் நடைபெறுகின்றன. சிராவண நட்சத்திரம், விஷ்ணு தீபம், தனுர் மாத பூஜை போன்றவை நடைபெறுகின்றன. வைகுண்ட ஏகாதசி அன்று வேங்கை அலங்காரம் செய்யப்படுகின்றது

ஆலயம் காலை 8.30 முதல் 12.00 வரையிலும், மாலை 6.00 முதல் 9.00 மணி வரையும் திறந்து வைக்கப்பட்டு உள்ளது. சனிக்கிழமைகளில் விஷேச பூஜைகள் நடைபெறுகின்றன.

---

நன்றி: இந்த கட்டுரையில் காணப்படும் மூலச் செய்திகள் அனைத்திற்கும் ஆதாரம் திரு லஷ்மி நாராயணன் ஸ்ரீதர் அவர்களின் இணையதள செய்திகளே. http://www.karnatakavaishnavatemples.net என்ற இணையதளத்தில் உள்ளவற்றை தமிழில் பிரசுரித்துக் கொள்ள அனுமதி தந்துள்ள அவருக்கு என் நன்றி. திரு ஸ்ரீதரின் முகவரி:

**Lakshminarasimhan Sridhar, SRIHARITHA [Behind Water Tank], I Floor, Sathyam Street, I Cross, Munieshwara Swamy Layout, Munnekolala, Marthahalli Post, Bangalore: 560037, INDIA**

**Tel:- Resi: 91 80 28475017, Medical Shop : 91 80 41169839, Cell: 91 9448322378 E-mail- srihi@vsnl.com**